# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).
************

மனு எண்: 470/2017/ஊராட்சி

ஆணை எண்: 64/2017

நாள்: 07/04/2017

மு. சாத்தையா,
ஒன்றிய செயலாளர்,
அம்மா பேரவை, நயினார் கோவில் ஒன்றியம், - மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
நயினார் கோவில் ஊராட்சி ஒன்றியம்,
இராமநாதபுரம் வட்டம். - எதிர் மனுதாரர்

## ஆணை

இராமநாதபுரம் மாவட்டம், நயினார் கோவில் ஊராட்சி ஒன்றிய அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் திரு. மு. சாத்தையா என்பவர், அவருடைய 6.4.2017 நாளிட்ட மனுவில், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், உத்தரவு ந.க.ஊ.தி4/686/2016 நாள்:7.12.2016ல் இராதாப்புளி ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி அமைந்துள்ள தெருவில் இராதாப்புளி ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்க நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், இது குறித்து நயினார் கோவில் வட்டார வளர்ச்சி அலுவலரை பலமுறை தொடர்பு கொண்ட போது இராதாப்புளி ஊராட்சி பொதுநிதி கணக்கில் போதிய பணம் இல்லாததால் மேற்கண்ட வேலையை எடுத்து செய்ய இயலாது என தெரிவித்தார் என்றும், ஆனால் இராதாப்புளி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த திருமதி கு. கருப்பாயி அவரது கணவர் திரு. அருளன் ஆகியோர்கள் துணையுடன் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. எஸ். இளங்கோவன் என்பவரால் முறைகேடாக உள்ளாட்சி தேர்தல் தேதி அறிவித்த பிறகு

6.10.2016ல் முருகேசன் என்பவர் பெயரில் ஊராட்சி பொது கணக்கில் ரூ.4,86,090/- செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து பொதுமக்கள் மற்றும் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் பயன்படுத்தும் சாலை என்பதால், மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி அளித்த சாலைப் பணியை செய்யவும், முறைகேடாக செலவு மேற்கண்ட வட்டார வளர்ச்சி அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு. மு. சாத்தையா,
ஒன்றிய செயலாளர்,
அம்மா பேரவை, நயினார் கோவில் ஒன்றியம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

நகல்:

மாவட்ட ஆட்சித் தலைவர்,
இராமநாதபுரம் மாவட்டம்,
இராமநாதபுரம் (இணைப்புகளுடன்)